Cambridge Assessment International Education

# Cambridge International A Level

**TAMIL** **9689/42**

Paper 4 Texts **October/November 2022**

**2 hours 30 minutes**

You must answer on the enclosed answer booklet.

You will need: Answer booklet (enclosed)

**INSTRUCTIONS**
- Answer **three** questions in total in **Tamil**, each on a different text:
  - Answer **at least one question** from Section 1.
  - Answer **at least one question** from Section 2.
  - Answer **one other question** from **either** Section 1 **or** Section 2.
- Follow the instructions on the front cover of the answer booklet. If you need additional answer paper, ask the invigilator for a continuation booklet.
- Dictionaries are **not** allowed.
- You may **not** take set texts into the examination.

**INFORMATION**
- The total mark for this paper is 75.
- Each question is worth 25 marks.

**கட்டளைகள்**
- மொத்தம் மூன்று கேள்விகளுக்கு, வெவ்வேறு பாடப் பகுதிகளிலிருந்து, எடுத்து, **தமிழில்** விடை எழுதவும்:
  - முதல் பகுதியிலிருந்து **குறைந்தது ஒரு கேள்விக்கு** விடை எழுதவும்.
  - இரண்டாவது பகுதியிலிருந்து **குறைந்தது ஒரு கேள்விக்கு** விடை எழுதவும்.
  - முதல் **அல்லது** இரண்டாவது பகுதியிலிருந்து **மற்றொரு கேள்விக்கு** விடை எழுதவும்.
- விடை எழுதுவதற்கான புத்தகத்தின் முதல் பக்கத்திலுள்ள கட்டளைகளைப் பின்பற்றவும். கூடுதல் விடைத் தாள்கள் தேவைப்பட்டால், தேர்வு அதிகாரியிடம், தொடர்ச்சிக்கான புத்தகத்தைக் கேட்கவும்.
- அகராதிகள் **அனுமதிக்கப்படமாட்டாது**.
- தேர்வு அறைக்குள் எந்தப் பாடப் புத்தகத்தையும் எடுத்துச் **செல்லக்கூடாது**.

**தகவல்**
- இந்தக் கேள்வித்தாளுக்கான மொத்த மதிப்பெண்கள் 75.
- ஒவ்வொரு கேள்விக்கும் 25 மதிப்பெண்கள்.

This document has **8** pages. Any blank pages are indicated.


© UCLES 2022

**விடைத்தாள் புத்தகத்தைப் பயன்படுத்துவதற்கான கட்டளைகள்**

கருப்பு அல்லது கரு நீலப் பேனாவைப் பயன்படுத்தவும்.

வரைபடங்களுக்கோ, கிராப் வரையவோ நீங்கள் எச்.பி.பென்சிலைப் பயன்படுத்தலாம்.


உங்களுடைய பெயர், சென்டர் எண், உங்கள் எண் ஆகியவற்றை, இந்தப்பக்கத்தின் மேலேயுள்ள, அதற்கான இடத்தில் எழுதவும். தெளிவாக, பெரிய எழுத்துக்களில் எழுதவும்.

எழுத்துக்களை அழிப்பதற்கான பேனாவையோ, திரவத்தையோ **பயன்படுத்தக்கூடாது**.

எந்த பார்க்கோடிலும் **எழுதக்கூடாது**.

கொடுக்கப்பட்ட விடைத்தாள் புத்தகத்தில் எழுதவும். தாளின் இரு பக்கங்களிலும் எழுத வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் விடை எழுதிய பின்னர் இரண்டு வரி இடைவெளி விடவும்.

நீங்கள் விடை எழுதும் கேள்வியின் எண்ணை முதல் மார்ஜினில் எழுதவும்.




நீங்கள் விடை எழுதும் கேள்வியில் துணைக் கேள்விகள் இருந்தால் (எடுத்துக்காட்டு 1.a) துணைக் கேள்வி எண்ணை இரண்டாவது மார்ஜினில் எழுதுங்கள்.

நீங்கள் விடைத்தாள் புத்தகத்தில், விடை எழுதுவதற்கான குறிப்புகளையும் பேனாவால் எழுதிப் பழகலாம் ஆனால் மதிப்பெண். **போடவேண்டாத** அத்தகைய குறிப்புகளை அடித்து விடுங்கள். படிக்கமுடியாமல் அடிக்கத் தேவை இல்லை.

விடைத்தாள் புத்தகத்தின் எந்தப் பகுதியயையும் **கிழித்துவிடாதீர்கள்**.

நீங்கள் எழுதிய எல்லா தாள்களையும் கொடுத்து விடுங்கள் தொடர்ச்சிக்காக விடைத்தாள். புத்தகங்கள் வாங்கியிருந்தால் அவற்றையும் விடைத் தாள் புத்தகத்தில் இணைத்து விடுங்கள்.

BLANK PAGE

© UCLES 2022 

ஏதாவது **மூன்று** கேள்விகளுக்கு, வேறு வேறு பாடப் பகுதிகளிலிருந்து கேள்விகள் எடுத்து விடைகளை எழுதவும். முதல் பகுதியில் இருந்து ஒரு கேள்வியும், இரண்டாவது பகுதியில் இருந்து ஒரு கேள்வியும் பகுதி ஒன்று அல்லது இரண்டில் இருந்து மூன்றாவது கேள்வியும் எடுத்து விடைகள் எழுதவும்.

**பகுதி 1**

**1 பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a) நற்றிணை**

தட மருப்பு எருமைப் பிணர்ச் சுவல் இரும் போத்து,
மட நடை நாரைப் பல் இனம் இரிய,
நெடு நீர்த் தண் கயம் துடுமெனப் பாய்ந்து,
நாட் தொழில் வருத்தம் வீட, சேண் சினை
இருள் புனை மருதின் இன் நிழல் வதியும்
யாணர் ஊர! நின் மாண் இழை மகளிரை
எம் மனைத் தந்து நீ தழீஇயினும், அவர்தம்
புன் மனத்து உண்மையோ அரிதே: அவரும்,
பைந் தொடி மகளிரொடு சிறுவர்ப் பயந்து,
நன்றி சான்ற கற்பொடு
எம் பாடு ஆதல் அதனினும் அரிதே.
-- பாடல் 330 - ஆலங்குடி வங்கனார்

**(i)** புது வருவாய் உடைய ஊர் என்பதனை விளக்க எருமையையும் நாரையையும் சுட்டிக்காட்டி இப்பாடல் கூறும் சான்றுகள் என்னென்ன?

**(ii)** அதே பாடலில் பரத்தையிடமிருந்து பிரிந்து மீண்டு வந்த தலைவன், தலைவியுடன் கூடியிருக்க விழைந்தபோது வாயில் மறுத்த தோழி கூறிய தலைவியின் சிறப்புகள் என்னென்ன? [25]

**அல்லது**

**(b) சிலப்பதிகாரம்**

பொற்கொல்லனின் தீய எண்ணம், வினை வசத்தால் சிக்கியிருந்த மன்னனை '...கொன்று, அச்சிலம்பு கொணர்க ஈங்கு' என்று ஆணையிடச் செய்ததன் பின்னணி என்ன என்று விளக்குக. [25]

**2 திருக்குறள்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** 221. வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

222. நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.

223. இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள.

224. இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகங் காணும் அளவு.

225. ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

ஈகை என்னும் அதிகாரத்தில் ஈகையின் இலக்கணம், முறை, சிறப்பு, பயன் மற்றும் ஈயாமையின் குற்றத்தை எவ்வாறு விளக்குகிறார் திருவள்ளுவர்? [25]

**அல்லது**

**(b)** நட்பு அதிகாரத்தில் 'பின்னீர பேதையார் நட்பு', 'அகநக நட்பது நட்பு', 'அல்லல் உழப்பதாம் நட்பு', 'இடுக்கண் களைவதாம் நட்பு', 'புனையினும் புல்லென்னும் நட்பு' என நட்பின் சிறப்பியல்புகள் பற்றி வள்ளுவர் பெருமான் தரும் விளக்கம் என்ன என்று விவரிக்கவும். [25]

**3 தேவாரம் - அப்பர்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கல நமச்சி வாயவே.

பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்ட அப்பர் பெருமான், நமச்சிவாய பதிகம் பாடப்பட்ட சூழ்நிலையையும், அப்பதிகத்தின் சிறப்பினையும் பற்றி விளக்குக. [25]

**அல்லது**

**(b)** ‘நமச்சிவாய’ என்னும் ஐந்தெழுத்து மந்திரம் அச்சங்கள் மற்றும் ஐயங்கள் நீங்கித் தன்னம்பிக்கை வளரப் பாடப்பட்டது என்பதை அப்பதிகத்தை கொண்டு விளக்கம் தரவும். [25]

© UCLES 2022

**பகுதி 2**

**4 இக்காலக் கவிதைகள்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a) பாரதியார்**
'கண்ணன் என் சேவகன்' என்னும் கவிதையில், ஒரு சாமானிய பணியாள் தரும் தொந்தரவுகளுக்கும் ஆனால் சேவகனாக வந்த கண்ணனால் உண்டாகும் நன்மைகளுக்கும் பாரதியார் தரும் ஒப்புமை விளக்கங்கள் என்னென்ன? [25]

**அல்லது**

**(b) பாரதிதாசன்**
இயற்கை என்ற தொகுப்பில் பாரதிதாசன் 'காடு' மற்றும் 'கானல்' பற்றி பாடும்போது 'முட்புதர்கள் மொய்த்ததரை...' என்றும் 'வானும் கனல்சொரியும்' என்றும் தொடங்கி 'குளிர் சோலையும் ஓடையுமே சுடவரும் கனலோ...' என்று நிறைவு செய்திருக்கும் கவிதை நயத்தினை பற்றி எடுத்துக்காட்டுகளுடன் விளக்கவும். [25]

**5 நாவல்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** புதிய உலகம் படைக்கவும், பகைமை பாராட்டாது பயன் கருதாது நாட்டுக்கு பணிபுரியவும் மக்களை அழைக்கும் நோக்கமாகவே 'அந்த நாள்' கதை அதன் ஆசிரியர் மு வரதராசன் அவர்களால் எழுதப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் ஏற்கிறீர்களா என்று சான்றுடன் விளக்கவும். [25]

**அல்லது**

**(b)** 'அந்த நாள்' கதையை அதன் கதாநாயகனே கதை கூறுவது போல் எழுதியிருக்கும் பாணியைப் பற்றி விளக்கி எழுதவும். [25]

**6 நவீன தமிழ்ச் சிறுகதைகள்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** பாவண்ணனின் 'மரங்களின் கதை' என்ற சிறுகதையில் 'அழிக்க தெரிந்தவனுக்குத்தான் வளர்க்கவும் தெரியும்' என்ற விளக்கத்தின் முன்கதை என்ன என்று விரிவாக விளக்கவும். [25]

**அல்லது**

**(b)** 'ஜன்னல்' சிறுகதையில் மனஉளைச்சலால் அவதியுறும் கதாநாயகன் சந்தித்த இன்னல்கள் என்ன? அதிலிருந்து அவனால் மீண்டுவர முடிந்ததா? [25]

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of Cambridge Assessment. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is a department of the University of Cambridge.

© UCLES 2022 